DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

| | |
|---|---|
| Case No. | .. O.S. No. 115/2020 |
| Deposition of witness for | ...P.W.1 |
| Name | ஆழ்வார் |
| Father's /Husband Name | ... |
| Village | ... |
| Taluk | ... |
| Caste | ... |
| Calling | ... |
| Religion | ... |
| Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2022

முதல் விசாரணை

நான் வழக்கில் 1ம் வாதியாவேன். மற்ற வாதிகள் என்னுடைய குழந்தைகள். மற்ற வாதிகளுக்காகவும் நான் சாட்சியமளிக்கிறேன். பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும், அதை படித்து காண்பிக்கப்பட்டு, கைரேகை செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் நான் அறிந்தவகையில் உண்மையானவை. 17.02.2019 அன்று எனது கணவர் ஆர்த்தி என்பவர் இறந்துபோனதற்கான இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ-1, மேற்படி எனது கணவரின் வாரிசுசான்றிதழ் வா.சா.ஆ-2, 14.02.1991ல் தேதியன்று காலமான என் மகன் முத்துராஜன்(1ம் பிரதிவாதியின் கணவர்) இறப்புசான்றிதழின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 3, என் கணவர் 20.11.1975ல் 1வது தபசில், 2அயிட்ட சொத்தை கிரையம் பெற்றதற்கான பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் அசலை என் கணவர் உயிருடன் இருக்கும் போது, 1ம்பிரதிவாதியிடம் கொடுத்துள்ளார். எனவே அதன் சான்றிட்ட நகல் ஆவணம் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ-4, என் கணவர் 28.05.1982ல் 1வது தபசில், 3,4,5வஅயிட்ட சொத்தை கிரையம் பெற்றதற்கான பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் அசலை என் கணவர் உயிருடன் இருக்கும் போது, 1ம்பிரதிவாதியிடம் கொடுத்துள்ளார். எனவே அதன் சான்றிட்ட நகல்

ஆவணம் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ–5 30.03.2001 ல் எனது கணவர் 2 வது தபசில் சொத்தை கிரையம் பெற்றதற்கான பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் அசலை என் கணவர் உயிருடன் இருக்கும் போது, 1 ம்பிரதிவாதியிடம் கொடுத்துள்ளார். எனவே அதன் சான்றிட்ட நகல் ஆவணம் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ–6,, தபசில் சொத்திற்கான வில்லங்கசான்றிதழ் வா.சா.ஆ– 7( 54 பக்கங்கள்),(புகைப்பட நகல் என்பதால் பிரதிவாதியின்தரப்பில் ஆடசேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனையின்பேரில் குறியீடு செய்யப்படுகிறது). தபசில் சொத்துக்களை பொறுத்த மாக்கெட் மதிப்பு ஆவணம் வா.சா.ஆ–8, 12.03.2020 ல் வாதிகள், வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ–9, வா.சா.ஆ 9 அறிவிப்பு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டதற்கான அஞ்சலக ரசீதுகள் 3 வா.சா.ஆ.10 வரிசை,(3 எண்ணம்), வா.சா.ஆ–9 அறிவிப்பை 1 முதல் 3 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் வா.சா.ஆ–11 வரிசை (3 எண்ணம்), 18.03.2020 ல் பிரதிவாதிகள், வழக்கறிஞர் மூலமாக எங்கள் வழக்கறிஞருக்கு அனுப்பிய அறிவிப்பு, தபால் உறையுடன் வா.சா.ஆ–12,

(இந்த நிலையில் வாதிதரப்பில் மேலும் ஆவணங்களை முன்னிலை படுத்த சாட்சியின் முதல் விசாரணை பகுதியாக நிறுத்தம் செய்யப்படுகிறது )